**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUVOTTIYUR**

| | | |
|---|---|---|
| **Calendar** | **:** | |
| **Miscellaneous** | **:** | |
| **Preliminary Register** | **:** | **Case No. CC/82/2025** |
| **Sessions** | **:** | |
| **Deposition of witness for** | **:** | **Prosecution PW 4 / LW 4** |
| **Name** | **:** | திரு. சரவணன் |
| **Father's/Husband's Name** | **:** | திரு. ஜெகநாதன் |
| **Village** | | |
| **Taluk** | .. | |
| **Caste** | .. | |
| **Calling** | .. | |
| **Religion** | .. | |
| **Age** | .. | **44** |

**Date: 26/11/2025**

**(Solemnly affirmed before this court under act X of 1969)**

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் ஆகவில்லை. வழக்கறிஞரால் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை தொடர்ச்சி**

1. நான் தற்போது எண். 189, அவ்வை தெரு, பிளாக் B எண், 51 ஐம் அப்பாட்மெண்ட், பெரியார் நகர் என்ற முகவரியில் வசித்து வருகிறேன். கடந்த 2012ம் ஆண்டு ஜீவிதா என்பவரை செந்தில் குமார் என்பவருடன்

திருமணம் செய்து வைத்தேன். திருமணத்திற்கு சீர்வரிசையா பெண்ணுக்கு 30 சவரனும், மாப்பிள்ளைக்கு 10 சவரனும், கார், 1 லட்சம் ரூபாய் ரொக்கம் மற்றும் இதர சீர்வரிசைகள் கொடுத்தோம்.

2. திருமணத்திற்கு பின்பு எனது தங்கை டெல்லியில் வேலை பார்த்துக்கொண்டிருந்தார். மாப்பிள்ளை பெங்களூரில் வேலை பார்த்துக்கொண்டிருந்தார். பெரிய பிரச்சனைகள் எதுவும் இல்லை. எனது தங்கை டெல்லியிலிருந்து பெங்களூருக்கு வேலை மாற்றம் செய்து வந்துவிட்டார். மாமியார் கை செலவிற்கு பணம் தருவதில்லை, அவரது ATM கார்டை பிடுங்கி வைத்துக்கொண்டு அவருக்கு செலவிற்கு வாரத்திற்கு 200 ரூபாய் தான் தருவார்கள். நாங்கள் நேரில் சென்று பார்த்த போது எனது தங்கையின் மாமியார் நாங்கள் பார்த்துக்கொள்கிறோம் என்று கூறினார்கள். சிறிது காலத்தில் எனது தங்கை கற்பமானார். எனது அப்பாவிடம் எனது தங்கை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு எனக்கு சரியாக உணவு கொடுப்பதில்லை என்று கூறினார். நேரில் சென்று நாங்கள் பார்த்த மருத்துவரிடம் காண்பித்த போது அவர் எனது தங்கையை ஓய்வெடுக்க சொன்னார்கள். பிறகு எனது தங்கையின் வீட்டில் பேசி எனது தங்கையை எங்கள் வீட்டிற்கு அழைத்து வந்துவிட்டோம். ஒரு நாள் இரவு எனது தங்கையின் கணவர் அவரை அடித்ததாக போன் செய்தார். நான் எனது அப்பா, அம்மா மற்றும் எனது தம்பி ஆகியோர் சென்று பார்த்த போது வீட்டிற்குள் அனுமதிக்கவில்லை. 2017ம் வருடம் இருதியில் எனது தங்கையும் அவருடைய குழந்தையும் திருவொற்றியூரில் இருந்தார்கள். எனது தங்கையின் கணவர், மாமனார் மற்றும் மாமியார் ஆகியோர்கள் எனது அப்பாவை அடித்துவிட்டு குழந்தையை எடுத்துச் சென்று

விட்டார்கள். நாங்கள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். காவல் நிலையத்தில் சமாதானம் பேசிவைத்தார்கள்.எனது தங்கை அவருக்கு ஏற்பட்ட விஷயங்களுக்காக புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

3. உங்களுடைய தங்கை பெங்களூரில் வேலை செய்து கொண்டிருந்த போது குடும்பத்தாருடன் தான் இருந்தார். அப்போது நாங்கள் சென்னையில் தான் இருந்தோம். சம்பவத்தை பற்றி எனது தங்கை சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

4. நான் பெங்களூர் செல்வதற்கு முன்பாகவே போலீசார் என்னை விசாரித்தாகள் என்றால் சரிதான். நான் சொன்னவற்றை தான் அவர்கள் வாக்குமூலமாக பதிவு செய்து கொண்டார்கள் என்றால் சரிதான்.

5. புகாரில் எந்த தேதியில் எந்த வருடம், எந்த மாதம் எந்த சம்பவம் நடந்தது என்பது பற்றி விரிவாக உங்களுடைய வாக்கு மூலத்தில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிட்டு சொல்லவில்லை.

6. திருமணத்திற்கு சீதனமாக கொடுத்த பொருட்களை எல்லாம் நீங்கள் வாங்கி விட்டதாக எழுதி கையொப்பம் செய்துள்ளீர்கள் என்றால் குழந்தை நகைகளை தவிர மற்றவற்றை வாங்கிக்கொண்டோம். ஆனால் நகை, பணம், கார் ஆகியவற்றை நாங்கள் திரும்ப பெற்றதாக சொல்லியுள்ளோம் என்றால் சரிதான். நீங்கள் சொல்வது போல் உங்கள்

தங்கையை எந்த விதமான கொடுமையும் செய்யவில்லை என்றாலும், அவருடைய அராஜக போக்கால் தான் மேற்படி சம்பவங்கள் நிகழ்ந்துள்ளது என்றாலும் சரியல்ல. குடும்ப நல நீதிமன்றத்தில் தன் கணவருடன் சேர்ந்து வாழ வேண்டும் என்று உங்களுடைய தங்கை மனு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்.

K KARTHIK

Digitally signed by K KARTHIK
Date: 2025.11.26 15:32:41 +0530

**நீதித்துறை நடுவர்,**

**திருவொற்றியூர்**